வடசேரிக்கருகே பாலம் அமைப்பு

*353 வினா—திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வடச்சேரி கிராமத்தில் (அரிசன காலனி) சிறு பாலம் (கல்வெர்ட்) கட்ட அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை தற்போது என்ன நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) இவ்வேலைக்கு அரசு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் இவ்வேலை பேரூராட்சி ஒன்றியத்தால் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

Hostel for Co-operative trainees at Kancheepuram

*237 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Kancheepuram Co-operative Training Institute has made any request to the Government to provide funds during 1973 for the construction of a Hostel for the trainees; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) தலைவரவர்களே, 3.50 லட்சம் ரூபாய் அரசிடம் உதவி கேட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிசீலனை செய்து இரண்டு லட்சம் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : அந்தக் கட்டடத்தில் எத்தனை பேருக்கு அக்காமடேஷன் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்த ஆண்டு 516 பேர்களுக்கு இடவசதி இருக்கும்.